# 18

# ஒரே இறைவனில் நம்பிக்கை வாழ்வு

அந்தியோக்கு எப்பிபானின் ஆட்சியின் போது அந்நியரின் வழிபாடுகளைச் செய்வதற்கு தாயையும் ஏழு பிள்ளைகளையும் வற்புறுத்தினான். ஆனால் ஒரே கடவுளில் நம்பிக்கை வைத்திருந்த அவர்கள் அவ்வழிபாடுகளில் ஈடுபட மறுத்தனர். அதனால் அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அம்மரணத்தை எதிர்கொண்ட தாய் தம் பிள்ளைகளைத் தைரியப்படுத்தினாள். ''ஒன்பது மாதம் உன்னை என் வயிற்றில் சுமந்தேன். மூன்று ஆண்டு உனக்குப் பாலூட்டி வளர்த்தேன். இந்த வயது வரை உன்னைப் பேணிக் காத்து வந்துள்ளேன். நீ கடவுளுக்குச் சொந்தமானவன். ஆதலால் அஞ்சாதே! சாவை ஏற்றுக் கொள். ஏனெனில், இறுதித் தீர்ப்பின்போது நாம் இறைவனை சந்திப்போம்.'' என்று கூறி ஊக்க மூட்டினார்.

(2 மக்கபேயர் 7 அதி)

இக்கதையை மேலுள்ள வேதாகமப் பகுதியில் வாசித்து இன்னும் விபரமாக விளங்கிக் கொள்ளவும். மூட நம்பிக்கைக்கு அடிமையாகக் கூடாது எனவும், அதனால் வரும் சவால்களை எதிர்கொள்ள சக்தியை இறைவன் தருவாரென்பதும் இதனால் வெளிப்படுத்தப்படுகிறது. மூடநம்பிக்கை இறைவனுக்கு விருப்பமான செயல் அல்ல. இது முதலாம் கட்டளைக்கு எதிரானது. திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்களாகிய நாம் மூடநம்பிக்கையிலிருந்து விலகி இருக்க வேண்டும்.

**திருவிலியத்தில் சிலை வழிபாடு குறித்து எச்சரிக்கை**

*நீங்கள் சென்று விரட்டியடிக்கும் மக்களினங்களை உங்கள் கடவுளாகிய ஆண்டவர் வேரறுப்பார். நீங்கள் அவர்களை விரட்டியடித்து விட்டு அவர்களது நாட்டில் குடியேறுங்கள். உங்கள் முன்னிலையில் அவர்கள் முறியடிக்கப்பட்ட பின், அவர்களைப் பின்பற்றி வஞ்சிக்கப்படாதபடியும் இந்த மக்களினங்கள் தங்கள் தெய்வங்களுக்கு எப்படி ஊழியம் செய்தனவோ, அவ்விதமே நாங்களும் செய்வோம் என்று சொல்லி அவர்களின் தெய்வங்களைப் பற்றிக் கேட்டறியாதபடியும் கவனமாய் இருங்கள். உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு அவர்களது முறைப்படி செய்ய வேண்டாம். ஏனெனில் ஆண்டவர் வெறுக்கும் எல்லா அருவருப்பானவற்றையும் அவர்களுடைய தெய்வங்களுக்கு அவர்கள் செய்தார்கள். தங்கள் புதல்வரையும் புதல்வியரையும் கூட அவர்களின் தெய்வங்களுக்கென நெருப்பில் சுட்டெரித்தார்கள்.*

இச. 12 : 29 - 31

இப்பகுதியில் இஸ்ரயேல் மக்கள் உடன்படிக்கை நாட்டில் வாழ வேண்டிய முறையைப் பற்றியும் கானானியரின் மூட நம்பிக்கையிலிருந்து விலகி இருக்குமாறும் இறைவன் எச்சரிக்கிறார்.

மானிடா இம்மனிதர் சிலைகளிடம் தங்கள் மனத்தைப் பறிகொடுத்து அவற்றைத் தங்கள் முன் எழுப்பும் தீச்செயலில் ஈடுபட்ருக்கின்றார்கள். இவர்கள் என் திருவுளத்தை அறிய நான் விடுவேனோ? ஆகையால் நீ அவர்களோடு பேசி அவர்களிடம் சொல் தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே. இஸ்ரயேல் வீட்டாருள் எவராவது சிலைகளிடம் தங்கள் மனத்தைப்பறி கொடுத்து அவற்றைத் தங்கள் முன் எழுப்பும் தீச்செயலில் ஈடுபட்டுக் கொண்டே இறைவாக்கினரிடம் வந்தால் அவர்களுக்கு ஆண்டவராகிய நானே அவர்களின் எண்ணற்ற சிலைகளுக்கேற்ப பதில் அளிப்பேன். இவ்வாறு சிலைகளால் என்னை விட்டு விலகிப்போயிருக்கும் இஸ்ரயேல் வீட்டாரின் இதயங்கள் அனைத்தையும் நான் என் வயமாக்கிக் கொள்வேன்.

எசேக்கியேல் 14 : 3 - 6

மூடநம்பிக்கையை இறைவன் வெறுக்கிறார் என்பது இதனால் எடுத்துக் காட்டப்படுகிறது. இறைவன் வெறுக்கும் செயல்களிலிருந்து விலகி இருக்க வேண்டும். உண்மையான ஒரே இறைவனை மட்டுமே ஆராதிக்க வேண்டும். இஸ்ரயேலர் மூட நம்பிக்கையைப் பின்பற்றியதாலேயே பாபிலோனியாவுக்கு நாடுகடத்தப்பட்டனர்.

சிலைகள் பக்கம் திரும்ப வேண்டாம் உங்களுக்கெனத் தெய்வப் படிமங்களை வார்த்துக் கொள்ள வேண்டாம். நானே உங்கள் கடவுளாகிய ஆண்டவர்.

(லேவியர் 19 : 4)

வேறு மதத்தினர் பயன்படுத்தும் சிலைகளை இறைவன் வெறுக்கிறார் என்பதை இப்பகுதி வெளிப்படுத்துகிறது.

உங்கள் நடுவில் ஓர் இறைவாக்கினன் அல்லது கனவு காண்பவன் தோன்றி உங்களிடையே ஓர் அடையாளம் அல்லது அருஞ்செயல் காட்டுவேன் என்று சொல்லலாம். அவன் சொல்வதுபோல் அடையாளம் அல்லது அருஞ்செயல் நடக்கலாம். அதன்பின் அவன் வாருங்கள் வேற்றுத் தெய்வங்களைப் பின்பற்றி அவற்றிற்கு ஊழியம் புரிவோம், என்று கூறலாம். அவை நீங்கள் அறியாதவை. அந்த இறைவாக்கினன் அல்லது கனவு காண்பவனின் சொற்களுக்குச் செவிகொடுக்க வேண்டாம். ஏனெனில் உங்கள் கடவுளாகிய ஆண்டவர் மீது நீங்கள் முழு இதயத்தோடும் உள்ளத்தோடும் அன்பு கூர்கின்றீர்களா என்று அவர் உங்களைச் சோதிக்கின்றார். உங்கள் கடவுளாகிய ஆண்டவரைப் பின்பற்றி அவருக்கு அஞ்சி அவர்தம் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவர் குரலுக்குக் கீழ்ப்படிந்து அவருக்கு ஊழியம் செய்து அவரைப் பற்றிக் கொள்ளுங்கள்.

(இச. 13 : 1- 4)

மேற்கூறப்பட்ட இறைவார்த்தையின்படி போலி இறைவாக்கினர் அல்லது கனவு காண்பவன் கூறும் வார்த்தைகளுக்குச் செவிமடுக்க வேண்டாம். முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் இறைவனுக்கு மட்டும் அஞ்ச வேண்டும். அவர் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவர் குரலுக்குக் கீழ்ப்படிந்து அவருக்கு ஊழியம் புரிந்து அன்பு செய்ய வேண்டும்.

சிலை வழிபாடு சிலைகள் வழிபடுவது மட்டுமன்று நம்பிக்கைக்கு எதிராக நாம் தினமும் மேற்கொள்ளும் செயற்பாடுகளிலும் தங்கியுள்ளது. பணம், அதிகாரம், சொத்துப்போன்ற லௌகீக தேவைகளுக்கு இறைவனுக்குரிய மரியாதையைக் கொடுப்பது தகுதியற்ற செயலாகும். இறைவனுக்கும் லௌகீக தேவைகளுக்கும் ஒரே விதமான அன்பை செலுத்த முடியும். மறை சாட்சியரில் அநேகமானோர் மிருகங்களுக்கு ஆராதனை செய்ய மறுத்ததாலும் அவ்வாராதனையை ஏற்காததாலும் உயிர்த் தியாகம் செய்தனர். சிலைவழிபாட்டினால் இறைவனின் உன்னத தலைமைத்துவம் மறுக்கப்படுகிறது.

கத்தோலிக்க நம்பிக்கையின் படி நல்ல நேரம் பார்த்தல், சோதிடம் பார்த்தல், சகுனம் பார்த்தல், மந்திரம், சூனியம் செய்தல், எலுமிச்சைக்காய் வெட்டுதல் போன்றவை மூட நம்பிக்கைகளாகும். செல்வம், அதிகாரம், நல்வாழ்க்கை, சாதி, பரம்பரை, நாடு, பணமுதலீடு இவ்வாறானவைகளுக்கு அடிமையாதலும் மூட நம்பிக்கையாகும். இறைவனுக்குரிய இடத்தை இவ்வுலகை சார்ந்தவற்றுக்கும் வேறு நம்பிக்கைகளுக்கும் கொடுக்கக் கூடாது. பிற தெய்வங்களுக்குப் பின்னால் செல்லும் பொய் இறைவாக்கினரின் அருஞ்செயல் அல்லது அடையாளம் என்பனவற்றுக்கு ஏமாற வேண்டாம், என இறைவன் அறிவுரை கூறியுள்ளார்.

**இறைவனுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளச் செய்ய வேண்டியவை**

1. ஒரே இறைவனை மட்டும் ஆராதித்தல்.
2. ஒரே இறை வழிபாட்டால் இறை உறவை வளர்த்தல்.
3. மூட நம்பிக்கையிலிருந்து விலகி பிறரையும் அதிலிருந்து காப்பாற்றுதல்.
4. இறைவனில் சார்ந்திருந்து வாழ்வின் சவால்களுக்கு முகங்கொடுத்தல்.
5. பிசாசு, ஆவிகளில் நம்பிக்கை வைக்காதிருத்தல்.
6. இவ்வுலகிலுள்ள அனைத்தும் இறைவன் முன்னிலையில் தூசியென ஏற்றுக் கொள்ளல்.

## செயற்பாடு

1. ஒரே இறைவனை ஆராதிக்கச் செய்ய வேண்டியவை பற்றி ஐந்து விடயங்கள் தருக.

2. அன்றாட வாழ்வில் நீர் விலக்க வேண்டிய மூடநம்பிக்கைச் செயல்கள் ஐந்து தருக.

3. "**மூடநம்பிக்கையை எதிர்ப்போம்**" என்ற தலைப்பில் போஸ்டர் ஒன்றை தயாரிக்குக.

## வாழ்க்கைக்கு

மூட நம்பிக்கையிலிருந்து விலகி ஒரே இறைவனில் நம்பிக்கை வைப்போம்.